# NSW HEALTH

## COVID-19 Key Points – Tuesday 17 August 2021

**நியூ சவுத் வேல்ஸ் ஹெல்த்-இலிருந்துவரும் 2021 ஆகஸ்ட் 17-க்கான கோவிட்-19 பற்றிய முக்கிய குறிப்புகள்**

- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணிநேரத்தில், 452 புதிய கோவிட்-19 உள்ளூர் நோய்த்தொற்றாளர்கள் நியூ சவுத் வேல்ஸ்-ல் பதிவாகியுள்ளனர். அத்துடன், 70 வயதுப்பிரிவைச் சேர்ந்த ஒரு பெண் உயிரிழந்துள்ளார்.
- தெற்கு மற்றும் தென்மேற்கு சிட்னிப் பகுதிகள்தான் தொடர்ந்தும் அதிக எண்ணிக்கையிலான நோய்த்தொற்றாளர்களைக் கொண்டுள்ளன. மிகவும் கவலைக்கிடமான புறநகர்ப்பகுதிகளாக, பிளாக்டவுன் (Blacktown), செவின்ஹில்ஸ் (Seven Hills), மெர்ரிலாண்ட்ஸ் (Merrylands), கில்ட்ஃபோர்ட் (Guildford), ஓபெர்ன் (Auburn), பாங்க்ஸ்டவுன் (Bankstown) மற்றும் கிரீனேக்கர் (Greenacre) ஆகியவை இருந்துவருகின்றன.
- டபோ (Dubbo), வால்கெட் (Walgett) மற்றும் பேர்க் (Bourke) ஆகிய இடங்களிலுள்ள பழங்குடியின சமூகங்களைப் பற்றி நாங்கள் தொடர்ந்தும் கவலைப்படுகிறோம்.
- நேற்று, 152,000-க்கும் அதிகமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. உங்களுக்கு இலேசான அறிகுறிகள் இருந்தாலோ அல்லது நோய்த்தொற்று உள்ள ஒருவரோடு நீங்கள் தொடர்புபட்டிருந்தாலோ, பரிசோதனையைச் செய்துகொள்ள தயவுசெய்து தொடர்ந்தும் முன்வாருங்கள்.
- எங்கள் நோக்கமானது, மக்களை மருத்துவமனைக்கு அப்பால் உயிருடன் வைத்திருப்பதுதான். எங்களையும், நம் குடும்பங்களையும், எமது அன்புக்குரியவர்களையும், அத்துடன் நமது சமூகத்தையும் பாதுகாப்பதற்கு தடுப்பூசி முக்கியம். 18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய எவரும் தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளலாம். உங்களுக்கு அருகிலுள்ள தடுப்பூசி மையங்கள், பொது மருத்துவ நிலையங்கள் (GPs), மருந்தகங்கள் மற்றும் தற்காலிக மருத்துவ முகாம்கள் (pop-up clinics) ஆகியவற்றில் முன்பதிவுச் சந்திப்புகளைக் கண்டறிய, nsw.gov.au ஐப் பார்வையிடவும்.
- தற்போது மாநிலம் முழுவதும் 5.2 மில்லியன் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. நியூ சவுத் வேல்ஸ்-இல் கிட்டத்தட்ட 52% மக்கள் இப்போது குறைந்தபட்சம் ஒரு தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்.
- முக்கியமாகக் கலைக்கிடமான உள்ளூர் அரசாங்கப் பகுதிகளிலுள்ளவர்கள், அத்துடன் குறிப்பாக 16-39 வயதுடையவர்கள் ஆகியோர் தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளும் விகிதங்களை அதிகரிப்பதில் நாங்கள் ஆர்வமாக உள்ளோம். கடந்த 24 மணிநேரங்களில், நியூ சவுத் வேல்ஸ்-ல் உருவான நோய்த்தொற்றாளர்களில் 75% ஆனோர் 40 வயதிற்குட்பட்டவர்கள். பாதிப்புக்குள்ளாகக்கூடிய, 70 வயதிற்கு மேற்பட்டவர்களையும் விரைவில் தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளுமாறு நாங்கள் வலியுறுத்துகிறோம்.
- நாங்கள் 6 மில்லியன் தடுப்பூசிகளை எட்டும்போது, சமூகத்திற்கு வழங்கக்கூடிய கட்டுப்பாடுகளின் தளர்வு குறித்து எங்களால் சிந்திக்க முடியும்.
- ஒவ்வொருவருக்கும் தாம் செய்யவேண்டிய பங்கு என்றொன்று இருக்கிறது. தயவுசெய்து வீட்டிலேயே இருங்கள் மற்றும் பாதுகாப்பாக இருங்கள். ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம், எங்களால் இதைக் கடந்து செல்ல முடியும்.

Translated By WSLHD Translation Service, 17 August 2021
Tamil